வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்.

# திண்டுக்கல் அறிவுத்திருக்கோயில்

## 30-ம் ஆண்டு விழா

நாள் : 15-06-2024, சனிக்கிழமை, நேரம் : காலை 10.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

10.20: இறைவணக்கம், குரு வணக்கம் :

10.25 தவம் :

முதுநிலை பேரா. **நளினி தாமோதரன்**

இணை இயக்குனர் SMART- WCSC

10.40 வரவேற்புரை

அருள்நிதி. **P.V. பழனிச்சாமி** அவர்கள்

செயலாளர், திண்டுக்கல் அறிவுத்திருக்கோயில்,

10.45 தலைமையுரை

முதுநிலை பேரா. **M.K. தாமோதரன்**

நிர்வாக அறங்காவலர், திண்டுக்கல் அறிவுத்திருக்கோயில்,
துணைத்தலைவர், உலக சமுதாய சேவாசங்கம்

11.00 வாழ்த்துரை

**Rtn.ஆனந்தஜோதி ராஜ்குமார்**

மாவட்ட ஆளுநர், **RI** மாவட்டம்-3000

11.20 முனைவர் **V.கிருஷ்ணகுமார்**

இயக்குனர், ஆர்.வி.எஸ். கல்வி நிறுவனாங்கள், திண்டுக்கல்.

11.40 சிறப்புரை

பேராசிரியர். **M. இராமச்சந்திரன்**

அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

12.40 விருது வழங்குதல் - சிறந்த யோகா பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள்

SSM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY
RVS GROUPS OF COLLEGE
ST.FRANCIS XAVIER HR SEC. SCHOOL

12.45 நன்றியுரை :

அருள்நிதி. P. **மோகனவேலு**

பொருளாளர், திண்டுக்கல் அறிவுத்திருக்கோயில்.


உலகநல வாழ்த்து.

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்.

# அறிவுத்திருக்கோயில், திண்டுக்கல்

(Affiliated With WCSC - No:09)

## 30-ம் ஆண்டு விழா அழைப்பிதழ்




நாள்: 15.06.2024 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி

SSM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY

(Approved by AICTE, New Delhi / Affiliated to Anna University, Chennai / Accredited by NAAC)

(Accredited by NBA – ECE, EEE & MECH UG Programs)

Dindigul – Palani Highway, Dindigul 624 002

**Date:** 18.06.2024

## AWARD-WINNING EVENT

We are proud to announce that our institution received "The Best Performance Award in SKY Yoga" during the 30th annual event of the Temple of Consciousness, World Community Center in Dindigul on 15.06.2024. This award is given to institutions that participate regularly and promote yoga in educational settings. Mindfulness is a practice that can shape the human being. To live a human being as a human being through body and soul action. It is the art of making necessary corrections. This kind of mental training is provided by Dindigul Temple of Consciousness.

Prof. Nalini Dhomodharan led the Tavam for the participants. The welcome address was delivered by Thiru. P.V. Palanisamy, the Secretary of the Temple of Consciousness. There are temples in all the towns but there is only one in Temple of Consciousness. He said that the purpose of the temple of knowledge is to fix the body, life and mind. Prof. Dhomodharan, the Managing Trustee, gave the presidential address. Additionally, a special talk was presented by Prof. M. Ramachandran from Ayyanadar Janaki Ammal College, Sivakasi. He said that just as one gets a new meaning from reading books, the mind also gets peace and refreshment when one practices and meditates. Cleansing the mind is the mantra. A resourceful mind does not give up. It is the mind that makes the change. The whole form of virtue is mental training, he said. A vote of thanks was delivered by Mr. P. Mohanavelu, Treasurer of the Temple of Consciousness, Dindigul.

The following educational institutions received award for "The Best Performance Award in SKY Yoga":

- SSM Institute of Engineering and Technology, Dindigul.
- RVS groups of college
- ST. Francis Xavier HR Sec School

The award was received on behalf of our institution by Dr. M. Rameswari, Professor of Mathematics, and Dr. V. Kandavel, Associate Professor of Mechanical Engineering, from the Temple of Consciousness, World Community Center in Dindigul.

SSM Institute of Engineering and Technology, DINDIGUL-624 002

Dr.D.SENTHIL KUMARAN, M.E., Ph.D., (NUS)
Principal
SSM Institute of Engineering and Technology
Kuttathupatti Village, Sindalagundu Post,
Palani Road, Dindigul - 624 002

Scanned with OKEN Scanner

**Date:** 18.06.2024





## நல்லொழுக்கத்துக்கு வழி தரும் மனவளக்கலை
## நிரந்தர மகிழ்ச்சிக்கு உதவும் தியானம், மவுனம்

திண்டுக்கல்

மனவளக்கலை என்பது மனிதனைத் திருத்தி அமைக்கக் கூடிய ஒரு பயிற்சி. உடல், உள்ளம், செயலால் மனிதனை மனிதனாகவே வாழ செய்ய அவசியமான திருத்தங்களைக் கொடுக்கும் கலை இது. இப்படிப்பட்ட மனவளக்கலை பயிற்சியினை திண்டுக்கல்லில் அறிவுத்திருக்கோயில் வழங்கி வருகிறது. இக்கோயில் திண்டுக்கல்லில் நிறுவப்பட்ட 30 ஆண்டுகள் ஆனதை தொடர்ந்து அதன் ஆண்டு விழாவில் பங்கேற்ற பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.அவற்றில் சில இதோ...

**நல்லொழுக்கத்தை கற்றுக் கொடுக்கிறது**



**தாமோதரன், நிர்வாக அறங்காவலர், அறிவுத்திருக்கோயில், திண்டுக்கல்:** கோயில்கள் எல்லா ஊர்களிலும் இருந்தாலும் அறிவுத் திருக்கோயிலோ ஒன்றுதான் இருக்கிறது. இந்த கோயிலானது மனிதனுக்கு உடல், உயிர்,மனதிற்கு விருப்பு, வெறுப்பு, துன்பம் வருகிறபோதெல்லாம் நினைவுக்கு வரும். உடல், உயிர் ,மனதை சரி செய்ய வேண்டுமென்பதே அறிவுத் திருக்கோயிலின் நோக்கம். ஆண்டுதோறும் ஆயிரக்கனக்கான பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கிறோம். மனவளக்கலை மனிதனுக்கு தேவையான பயிற்சியாக இருக்கிறது. நல்லொழுக்கத்தை கற்றுக் கொடுக்கும் சிறந்த பயிற்சியாக இந்தகாலத்திற்கும் ஏற்றாற்போல் இருப்பதால் தான் அனைவரும் வரவேற்கின்றனர்.

**மாற்றத்தை ஏற்படுத்தும்**



**ஆனந்தஜோதி ராஜ்குமார், ரோட்டரி மாவட்ட ஆளுநர், திண்டுக்கல்:** அறிவுத் திருக்கோயில் பெருமை சேர்க்கும் இடம். இதன் அருமை எல்லோருக்கும் தெரியாது. இங்கு பயிற்சி பெற்றவர்கள் நன்கு அறிவர். இங்கு பயின்ற எனக்கு என்றுள் ஏற்பட்ட மாற்றங்கள் ஏராளம். அறிவுகண் திறக்கப்பட்டது என்றே கூறலாம். அறிவுத்திருக்கோயில் தான் வாழ்க்கையின் திருப்புமுனையாக மாறியது. தியானத்தின் மூலம் கிடைக்கும் அமைதி, பண்பாடு, மனம் தளராமை போன்றவை முக்கியத்துவம் வாய்ந்தது. பள்ளி மாணவர்கள் அனைவரிடமும் இதனை கொண்டு போய் சேர்க்க வேண்டும். அறிவுத்திருக்கோயிலின்கோட்பாடுகள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**மாற்றங்களை காண முடிகிறது**



**கிருஷ்ணகுமார், இயக்குனர், ஆர்.வி.எஸ்., கல்வி நிறுவனங்கள், திண்டுக்கல்:** எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். அதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். அதற்கு அறிவுத் திருக்கோயிலில் அளிக்கப்படும் பயிற்சிகள் பெரிதும் உதவுகிறது. கடவுளை நினைத்தால் மட்டும் போதாது அவர்அளிக்கும் வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும். இறைவன் உங்களுக்குள் இருக்கிறார். உற்சாகம் குறைந்தால் உடல் வலிமை குறைந்து விடும். அதற்கு மனதை சரியாகவைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மனவளக் கலை பயிற்சி முக்கியமானது. பயிற்சிக்கு பின் மாணவர்களிடம் நிறைய மாற்றங்களை காண முடிகிறது.

**நல்லொழுக்கத்தின் முழு வடிவம்**



**ராமசந்திரன், பேராசிரியர், பட்டிமன்ற பேச்சாளர்:** உணவு அதிகமாகும்போது கூட அது எதிர்வினையாற்றி விடும். அதேபோல் ஆடம்பரத்தை மகிழ்ச்சி என நினைக்கின்றனர். ஆனால் இவையெல்லாம் நிரந்தர மகிழ்ச்சி அல்ல. தியானம், மவுனம் போன்றவற்றை மேற்கொள்கிற போது தான் நிரந்தரமகிழ்ச்சியை உணர முடியும். படிக்க, படிக்க புத்தகங்களில் எப்படி புதுப்புது அர்த்தங்கள் கிடைக்கிறதோ அதேபோல் தியானம்செய்யும்போது பெரும் அமைதியும், புத்துணர்ச்சியும் கிடைக்கிறது. மனக சுத்தம் என்பது தான் மந்திரம். வளம் உள்ள மனம்தளராது. மனது தான் மாற்றத்தை ஏற்படுத்தும். நல்லொழுக்கத்தின் முழு வடிவம் மனவளக்கலை பயிற்சியே.

**மாணவர்களிடம் மாற்றம் தெரிகிறது**



**சகாயமேரி, தலைமையாசிரியர், புனித பிரன்சிஸ் சேவியர் பள்ளி:** புனித பிரான்சிஸ் சேவியர் பள்ளியின் மாணவர்கள் அனைவருக்கும் மனவளக்கலை பயிற்சியான யோகா, தியானம் உள்ளிட்டவற்றை அறிவுத்திருக்கோயிலின் வாயிலாக கற்றுக் கொடுத்தோம். அதற்கான விருது வழங்கப்பட்டது. 500 க்கு மேற்பட்ட மாணவர்கள், பள்ளியின் ஆசிரியர்கள் இந்த பயிற்சியினை மேற்கொண்டனர். அவர்களிடம் நல்ல மாற்றம் தெரிந்ததை பார்க்க முடிகிறது. அறிவுத்திருக்கோயிலின் இந்த சேவை மேலும் தொடர வேண்டும்.

Dr.D.SENTHIL KUMARAN, M.E., Ph.D., (NUS)
Principal
SSM Institute of Engineering and Technology
Kuttathupatti Village, Sindalagundu (Po),
Palani Road, Dindigul - 624 002.

SSM Institute of Engineering and Technology
DINDIGUL-624 002

Scanned with OKEN Scanner